# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 07 புதன்கிழமை 21.05.2025 கதிர் 201



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -

யாழ் முற்றம்

Yarl Muttram

Youtube Channel




## தற்காலிக இடைநிறுத்தம் தீர்வைப் பெற்றுத்தராது! வர்த்தமானி அறிவித்தல் வாபஸ் பெறப்பட வேண்டும்!

### அரசிடம் சுமந்திரன் வலியுறுத்து



வடமாகாணத்திலுள்ள காணிகள்தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதைத் தற்காலிகமாக இடைநிறுத்துவது எந்தவொரு தரப்பினருக்கும் நிரந்தர தீர்வைப் பெற்றுத்தராது எனச் சுட்டிக்காட்டியுள்ள இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச்செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், எனவே

7 ➤

# ரணில் - மைத்திரி இரகசிய சந்திப்பு



### அநுர அரசின் தோல்வி உறுதியாகிவிட்டது என்கின்றார் முன்னாள் எம்.பி. பிரேம்நாத்

கொழும்பு, மே 21

உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைத்தல் உள்ளிட்ட எதிர்கால அரசியல் நகர்வுகள் குறித்து கொழும்பு - பிளவர் வீதியில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அலுவலகத்தில் இரகசிய கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் இதில் பங்கேற்றுள்ளார்.

முன்னாள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் முக்கிய அரசியல் பிரமுகர்களும் இதில் கலந்துகொண்டுள்ளனர்.

7 ➤

### முல்லைத்தீவில் பட்டா ரக வாகனம் மோதி

## பாடசாலை மாணவி பரிதாப உயிரிழப்பு!



முல்லைத்தீவு, மே 21

முல்லைத்தீவு, கர்நாட்டுக்கேணிப் பகுதியில் இன்று காலை பட்டா ரக வாகனம் மோதி பாடசாலை மாணவி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

7 ➤

## கெஹலியவின் மகனும் கைது!



கொழும்பு, மே 21

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் மகன் ரமித் ரம்புக்வெல, இலஞ்சம், ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யும் ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ரமித் ரம்புக்வெலவின் தந்தையான கெஹலிய ரம்புக்வெல இலஞ்சம், ஊழல் குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைக்காகக் கடந்த 7ஆம் திகதி இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகியபோது ஆணைக்குழு அதிகாரிகளால்

7 ➤

## 3 வாகனங்கள் மோதி விபத்து!

### 7 பேர் வைத்தியசாலையில்



சிலாபம், மே 21

சிலாபம் - கொழும்பு பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 7 பேர் காயமடைந்துள்ளனர்.

சிலாபம் - கொழும்பு பிரதான வீதியிலுள்ள

7 ➤

## 769 வழித்தட சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்காரர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், மே 21

யாழ்ப்பாணத்தில் 769 வழித்தட சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் உரிமையாளர்கள், சாரதிகள், நடத்துனர்கள் வீதி மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் நகர் பகுதியில் இருந்து புறப்படும் 764 வழித்தட பஸ்கள் கடந்த காலங்களில், வசாவிளான் சந்தியில் இருந்து,

7 ➤



# "இலங்கையில் சைபர் பாதுகாப்பு ஆணையம்"



கொழும்பு, மே .21

இலங்கையில் முன்மொழியப்பட்ட சைபர் பாதுகாப்பு சட்டத்தை விரைவாக நிறைவேற்ற தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக டிஜிட்டல் பொருளாதார அமைச்சகம் அறிவித்துள்ளது.

அமைச்சகத்தின் கூற்றுப்படி, தேசிய சைபர் பாதுகாப்பு தொடர்பான விதிமுறைகளை அறிமுகப்படுத்துவதற்கும் செயல்படுத்துவதற்கும் பொறுப்பான ஒரு பிரத்யேக சைபர் பாதுகாப்பு ஆணையத்தை நிறுவுவதற்கான ஏற்பாடுகள் இந்த சட்டத்தில் அடங்கும்.

இந்த சட்டம் 24%7 சைபர் பாதுகாப்பு கண்காணிப்பு, அரசாங்க வலைத்தளங்களை வடிவமைத்து பராமரிப்பதற்கான வழிகாட்டுதல்கள் மற்றும் இந்த தர நிலைகளுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்கும் உதவும்.

அதன்படி, வரைவு சட்டம் தற்போது சட்ட வரைவாளர் துறையில் மதிப்பாய்வு செய்யப்படுகிறது, மேலும் அரசாங்கம் தேசிய டிஜிட்டல் பாதுகாப்பு உள்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு முன்னுரிமை அளித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# "நாட்டில் அத்தியாவசிய மருந்துகள் பற்றாக்குறை"

கொழும்பு, மே .21

நாடு முழுவதும் உள்ள மருத்துவமனைகளில் அத்தியாவசிய மருந்துகளின் பற்றாக்குறை அதிகரித்து வருவது குறித்து அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் கடுமையான கவலைகளை தெரிவித்துள்ளது.

அதன்படி, பிற முக்கிய மருந்துகளில் நுண்ணுயிர் எதிர்ப்பிகள், வலி நிவாரணிகள் மற்றும் இன்சுலின் போன்றவற்றின் கடுமையான பற்றாக்குறையை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

மருந்து விநியோகத்தில் தொடர்ந்து ஏற்படும் இடையூறுகள் நோயாளி பராமரிப்பு மற்றும் மருத்துவமனை செயல்பாடுகளுக்கு கடுமையான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்றும் மற்ற சுகாதார அதிகாரிகளும் எச்சரித்துள்ளனர்.






# இன்று முதல் அதிவேக நெடுஞ்சாலைகளில் ஆரம்பிக்கப்படும் புதிய வசதி!

கொழும்பு, மே .21

அதிவேக நெடுஞ்சாலைகளில் வங்கி அட்டைகள் மூலம் பணம் செலுத்தும் வசதி இன்று (21) முதல் ஆரம்பிக்கப்படும் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளது. நாட்டில் புதிய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி போக்குவரத்து சேவையை எளிதாகவும் மற்றும் வேகமாகவும் மாற்றுவதற்கு அரசாங்கத்தின் டிஜிட்டல் மயமாக்கல் கொள்கையின் அடிப்படையில் முன்வைக்கப்பட்டுள்ள திட்டத்தின்படி இந்த நடைமுறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இன்று முதல் 35 இடை மாறல்கள் மற்றும் 119 வெளியேறும் வாயில்களில் குறித்த சேவை வசதிகள் செயற்படுத்தப்படும் என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

மேலும் தெற்கு அதிவேக நெடுஞ்சாலை, கொழும்பு-கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலை மற்றும் மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் மீரிகம-குருநாகல் பகுதியின் வெளியேறும் வாயில்களில் வங்கி அட்டைகள் மூலம் பணம் செலுத்தும் வசதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# பாதுகாப்பு அமைச்சில் புதிய உள் விவகாரப் பிரிவு



கொழும்பு, மே .21

பொது சேவை வழங்கல் தொடர்பான விசாரணைகள் மற்றும் முறைப்பாடுகளைக் கையாள பாதுகாப்பு அமைச்சகம் அதன் வளாகத்தில் ஒரு உள் விவகாரப் பிரிவை நிறுவியுள்ளது.

2025-2029 தேசிய ஊழல் எதிர்ப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக, ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவின் வழிகாட்டுதலின் கீழ், ஜனாதிபதி செயலக சுற்றறிக்கையின்படி இந்தப் பிரிவு அமைக்கப்பட்டது.

ஊழலைக் குறைத்து நிறுவன வெளிப்படைத் தன்மையை மேம்படுத்துவதே ஐயுரு-வின் நோக்கமாகும் என்று அமைச்சகம் தெரிவித்துள்ளது. ஊழல் அபாயங்களைக் கண்டறிந்து மதிப்பிடுவதற்கும், உள் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கும் இது பொறுப்பாகும்.

இந்த பிரிவு ஜனாதிபதி செயலகம் மற்றும் லஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு ஆகிய இரண்டிற்கும் ஆண்டு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

பதவியேற்பு விழாவில் உரையாற்றிய பாதுகாப்புச் செயலாளர் ஏர் வைஸ் மார்ஷல் சம்பத் துய்யகொண்டா (ஓய்வு பெற்ற), இந்த முயற்சியின் வெற்றியை உறுதி செய்வதில் அனைத்து அரசு அதிகாரிகளும் கூட்டுப் பொறுப்பைப் பகிர்ந்து கொள்கிறார்கள் என்பதை வலியுறுத்தினார்.

இந்தப் பிரிவை அதன் தலைவராகப் பணியாற்றும் திருமதி பிரியங்கனி ஹேவரத்னா, அமைச்சின் ஊழியர்களுக்கு முறையாக அறிமுகப்படுத்தினார்.

இந்த நிகழ்வில் தேசிய புலனாய்வுத் தலைவர், பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர்கள், திட்டமிடல் (பேரிடர் முகாமைத்துவம்) பணிப்பாளர் நாயகம் மற்றும் பிற அமைச்சின் பணியாளர் அதிகாரிகள் கலந்து கொண்டனர். (ஐ)

# "ஒரு நாள் சேவையில் 4,000 கடவுச்சீட்டுகள்"




கொழும்பு, மே .21

கடவுச்சீட்டு வழங்குதல் தொடர்பான சேவைகளை விரிவுபடுத்துவதற்காக குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்திற்கு மொத்தம் 186 அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள் என்று பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற விவகார அமைச்சர் ஆனந்த விஜேபால செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ், எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போதே அவர் அதனை குறிப்பிட்டார்.

மேலும் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளதாவது,

முன்னர் ஒரு நாள் சேவையில் சுமார் 1,200 புதிய கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்ட போதிலும், தற்போதைய நிர்வாகம் 4,000 கடவுச்சீட்டுகளை வழங்கும் திட்டத்தை செயல்படுத்தியுள்ளது.

சேவைகள் விரிவுபடுத்தப்பட்டுள்ளதால், திணைக்களத்திற்குள் குறிப்பிடத்தக்க பணியாளர் பற்றாக்குறை நிலவுகிறது.

அதன்படி, எதிர்காலத்தில் புதிய அதிகாரிகள் திணைக்களத்தில் உள்வாங்கப்படுவார்கள்.

கடவுச்சீட்டுகளை வழங்குவதற்காக திணைக்களத்தின் தலைமை அலுவலகம் 24 மணி நேரமும் செயல்பட்டு வருகின்றது. கண்டி, குருநாகல் மற்றும் மாத்தறையில் உள்ள பிராந்திய அலுவலகங்களும் தற்போது அதிக எண்ணிக்கையிலான புதிய கடவுச்சீட்டுகளை வழங்குகின்றது. மன்னார் அலுவலகத்தில் கடவுச்சீட்டு வழங்குவதும் 50இல் இருந்து 200 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இதற்கிடையில், மின்னணு-கடவுச்சீட்டு திட்டத்தை எதிர்காலத்தில் செயல்படுத்த தேவையான டெண்டர்கள் கோரப்பட்டுள்ளதாகவும் விஜேபாலா தெரிவித்தார். (ஐ)

# திடீரென இழுத்து மூடப்பட்ட ஆடை தொழிற்சாலை நிர்க்கதியில் பணியாளர்கள்



கொழும்பு, மே .21

கொழும்பு கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தில் அமைந்துள்ள நேுஓவு ஆடைத் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதால் அங்கு பணிபுரிந்த 1,400க்கும் மேற்பட்ட பணியாளர்கள் வேலை இழந்துள்ள நிக்கதியில் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆடைத் தொழிற்சாலையின் நிர்வாகம் முன்னறிவிப்பு இன்றி தொழிற்சாலையை மூட நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

திடீரென இழுத்து மூடப்பட்ட ஆடை தொழில்சாலை நிர்க்கதியில் பணியாளர்கள் ; நேஓவ புயசஅநவெ குயஉவழசல ளுூரவள னுழறெ ஐெ முயவரயெலயமந

தொழிற்சாலை தற்போது பூட்டப்பட்டுள்ளதுடன், பாதுகாப்புப் பணியாளர்கள் மட்டுமே அங்கு இருப்பதாகக் கூறப்படுகிறது.

திடீரென தொழில்சாலை மூடப்பட்டதால் அங்கு பணிபுரிந்த பணியார்கள், எதிர்கால நடவடிக்கைகள் குறித்து அறியாமல், உதவியற்ற நிலையில் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)



# "மீறினால் கடுமையான நடவடிக்கை"

கொழும்பு, மே .21

கட்சித் தலைவர்கள் நிலையியற் கட்டளைகளை மீறி கேள்விகளை எழுப்பியுள்ளதால், நிலையியற் கட்டளைகள் 27(2) இன் கீழ் எழுப்பப்படும் கேள்விகள் தொடர்பாக கடுமையான நடவடிக்கை பின்பற்றப்படும் என்று சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன இன்று புதன்கிழமை (21) அறிவித்தார்.

"எதிர்க்கட்சித் தலைவரும் கட்சித் தலைவர்களும் சமீபத்தில் எழுப்பிய சில கேள்விகள் வாய்மொழி கேள்விகள் அல்லது ஒத்திவைப்பு நேரத்தில் கேள்விகள் வடிவில் எழுப்பப்பட்டிருக்கலாம்.

மேலும், கட்சித் தலைவர்கள் சமீபத்தில் கூடுதல் கேள்விகளை எழுப்புவதன் மூலம் நிலையியற் கட்டளைகளை மீறியுள்ளனர். எனவே, நிலையியற் கட்டளைகள் 27(2) இன் கீழ் உள்ள கேள்விகள் நிலையியற் கட்டளைகளுக்குக் கட்டுப்பட வேண்டும்," என்றும் சபாநாயகர் கூறினார். (ஐ)

# முதலை இழுத்துச் சென்ற இளம் குடும்பஸ்தர்



இளம் குடும்பஸ்தர் ஒருவரை முதலை இழுத்துச் சென்ற சம்பவம் செவ்வாய்க்கிழமை (20) மாலை வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரான் பாலம் மந்திரியாறு பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மந்திரியாறு நீரோடை பகுதியில் மூவர் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது கிண்ணையடி பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய ஒருவரை முதலை இழுத்துச் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்விடயம் தொடர்பாக வாழைச்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# ஆதாரங்களுடன் வெளிநாடு செல்லும் எம்.பி., குழுக்கள்

‘ஆப்பரேஷன் சிந்தூர்’ மற்றும்பாகிஸ்தானின் பயங்கரவாத ஆதரவை உலகிற்கு அம்பலப்படுத்த, காங்., – எம்.பி., சசி தரூர், தி.மு.க., – எம்.பி., கனிமொழி உள்ளிட்ட ஏழு எம்.பி.,க்கள் தலைமையில், அனைத்து கட்சி எம்.பி.,க்கள் அடங்கிய குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், வெளி நாடுகளுக்கு செல்லும்எம்.பி.,க்கள் குழுவினரை சந்தித்த மத்திய அரசு அதிகாரிகள், பாகிஸ்தானின் நேரடி மற்றும் மறைமுக பயங்கரவாத ஆதரவுக்கு உரிய ஆதாரங்கள், ஆவணங்கள் இருப்பதாக தெரிவித்துள்ளனர்.

மேலும், அந்நாட்டின் எல்லை தாண்டிய பயங்கரவாதத்தால், 40 ஆண்டுகளுக்கும் மேலாக, நம் நாட்டு மக்கள் அனுபவித்து வரும் துன்பங்கள், சந்தித்த பிரச்னைகள் குறித்த தகவல்களையும் தெரிவித்துள்ளனர்.

இந்த தகவல்கள் மற்றும் ஆதாரங்களை எல்லாம் தொகுத்து, வெளி நாடு செல்லும் எம்.பி., குழுக்களிடம், அதிகாரிகள் வழங்கி உள்ளனர்.

மேலும், சிந்து நதி நீர் விவகாரத்தில் நாடகமாடும் பாகிஸ்தானுக்கு பதிலடி கொடுக்கவும்எம்.பி.,க்கள் குழுக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ)






## மதுபான கொள்கை முறைகேடு ஐ.ஏ.எஸ்., அதிகாரி கைது



ராஞ்சி : ஜார்க்கண்ட் மாநிலத்தில் முதல்வர் ஹேமந்த் சோரன் தலைமையிலான ஜார்க்கண்ட் முக்தி மோர்சா - காங்கிரஸ் கூட்டணி ஆட்சி நடக்கிறது.

இங்கு, கடந்த 2022ல் புதிய மதுபான கொள்கையை மாநில அரசு அமல்படுத்தியது் இது, மாநில அரசுக்கு வருவாய் இழப்பை ஏற்படுத்தும் வகையில் இருப்பதாக புகார் எழுந்தது.

இதுதொடர்பாக, அப்போது கலால் துறை செயலராக இருந்த வி.கே. சவுபே, இணைச்செயலர் கஜேந்திர சிங் உட்பட மதுபான நிறுவனங்களின் உரிமையாளர்கள், இடைத்தரகர்கள் என பலர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையே, தற்போது பஞ்சாயத்து ராஜ் துறையின் முதன்மைச்செயலராக உள்ள வி.கே. சவுபே மீது வழக்குப்பதிவு செய்ய ஊழல் தடுப்புப் பிரிவுக்கு மாநில அரசு அனுமதி அளித்தது.

இதையடுத்து, சவுபே மீது வழக்குப்பதியப்பட்ட நிலையில், ஊழல் தடுப்பு பிரிவு அதிகாரிகள் நேற்று அவரை கைது செய்தனர் (ஐ)

## ரூ.2,291 கோடி கல்வி நிதி வழங்குங்கள் மத்திய அரசுக்கு எதிராக தமிழக அரசு வழக்கு

ரூ.2,291 கோடி கல்வி நிதியை வழங்க மத்திய அரசுக்கு உத்தரவிடக் கோரி உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு மனு தாக்கல் செய்துள்ளது.

மத்திய அரசு நிறுத்தி வைத்துள்ள கல்வி நிதியை வழங்கக்கோரி, உச்ச நீதி மன்றத்தில் வழக்கு தொடரப்படும் என முதல்வர் ஸ்டாலின் அறிவித்து இருந்தார். அதன்படி, வழங்க மத்திய அரசுக்கு உத்தரவிடக் கோரி உச்சநீத ிமன்றத்தில் தமிழக அரசு மனு தாக்கல் செய்துள்ளது.

மனுவில் தமிழக அரசு கூறியிருப்பதாவது: பி.எம். ஸ்ரீ, சமக்ரா சிக்ஷா திட்டத்தின் நிதியை நிறுத்தி வைத்தது சட்டவிரோதம். புதிய கல்வி கொள்கையை அமல்படுத்தாததால் நிதியை நிறுத்தி வைப்பது ஏற்புடையதல்ல. கல்வி திட்டத்துக்கான நிலுவை நிதி வழங்கப்படவில்லை. சமக்ரா திட்டத்துக்கான நிதியை 6மூ வட்டியுடன் 2,291 கோடி வழங்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு தமிழக அரசு கூறியுள்ளது. மத்திய அரசுக்கு எதிராக தமிழக அரசு தொடுத்துள்ள வழக்கு விரைவில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)



## மஹாராஷ்டிர அமைச்சரவை விரிவாக்கம் அமைச்சராக சக்கன் புஜ்பல் பதவியேற்பு



ஐந்து மாதங்களுக்கு பின், மஹாராஷ்டிர அமைச்சரவை நேற்று விரிவாக்கம் செய்யப்பட்டது. தேசியவாத காங்., மூத்த தலைவர் சக்கன் புஜ்பல், 77, புதிய அமைச்சராக பதவியேற்றார்.

மஹாராஷ்டிராவில், 2024 நவம்பரில் நடந்த சட்டசபை தேர்தலில், பா.ஜ., - ஏக்நாத் ஷிண்டேயின் சிவசேனா - அஜித் பவாரின் தேசியவாத காங்., அடங்கிய, ‘மஹாயுதி’ கூட்டணி அபார வெற்றி பெற்றது. அதிக தொகுதிகளில் பா.ஜ., வென்றதை அடுத்து, அக்கட்சியின் மூத்த தலைவர் தேவேந்திர பட்னவிஸ் முதல்வராக பதவியேற்றார்.

ஏக்நாத் ஷிண்டே, அஜித் பவார் ஆகியோர் துணை முதல்வர்களாக பதவியேற்றனர். இதைத் தொடர்ந்து, மஹாராஷ்டிர அமைச்சரவையும் பதவியேற்றது.

முந்தைய கூட்டணி அரசில் அமைச்சராக இருந்த தேசியவாத காங்., மூத்த தலைவர் சக்கன் புஜ்பலுக்கு, புதிய அமைச்சரவையில் இடம் அளிக்கப்படவில்லை. இது, ஓ.பி.சி., எனப்படும் இதர பிற்படுத்தப்பட்டோர் வகுப்பினரிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது.

இந்நிலையில், ஐந்து மாதங்களுக்கு பின் மஹாராஷ்டிரா அமைச்சரவை நேற்று விரிவாக்கம் செய்யப்பட்டது. மும்பையில் உள்ள கவர்னர் மாளிகையில் நடந்த விழாவில், தேசியவாத காங்., மூத்த தலைவர் சக்கன் புஜ்பல், அமைச்சராக பதவியேற்றார்.

அவருக்கு கவர்னர் சி.பி.ராதாகிருஷ்ணன் பதவி பிரமாணம் செய்து வைத்தார். அமைச்சர் புஜ்பலின் துறை குறித்த விபரங்கள் வெளியிடப்படவில்லை. மஹாராஷ்டிர அமைச்சரவையில் பா.ஜ.,வைச் சேர்ந்த 19 பேர், சிவசேனாவைச் சேர்ந்த 11 பேர் மற்றும் தேசியவாத காங்கிரசைச் சேர்ந்த ஒன்பது பேர் என, மொத்தம் 39 பேர் அமைச்சர்களாக உள்ளனர். (ஐ)

# கனவுகளே வெற்றியின் பாதை!






*1961. ஜூலை 1. ஹரியானா மாநிலத்தில் கர்னல் என்ற இடத்தில் பிறந்தார் கல்பனா சாவ்லா. அரசாங்கப் பள்ளியில் படித்தார். அப்போது ஜே.ஆர்.டி. டாடாவின் விமானம் ஓட்டும் திறனைப் பார்த்து, விமானம் ஓட்டும் ஆர்வம் வந்தது. பள்ளிப் படிப்பு முடித்தவுடன் சண்டிகரில் உள்ள பஞ்சாப் பொறியியல் கல்லூரியில் ஏரோநாட்டிகல் எஞ்சினியரிங் படிப்பில் (விமானம் ஊர்தியியல்) சேர்ந்தார். பொறியியல் பட்டம் பெற்றவுடன் உயர் படிப்புக்காக அமெரிக்கா சென்றார்.*



*ஜ/ன் பிளர்ரே ஹாரிசன் என்ற விமானப் பயிற்சி ஆசிரியரின் அறிமுகம் கிடைத்தது. 1983-ம் ஆண்டு இருவரும் திருமணம் செய்துகொண்டனர். அடுத்த ஆண்டு முதுகலைப்பட்டம் பெற்றார் கல்பனா. அவருடைய ஆர்வமும் உழைப்பும் தீவிரமாயின. மேலும் ஒரு முதுகலைப்பட்டம் பெற்றார். 1988-ம் ஆண்டு விண்வெளி பொறியலில் டாக்டர் பட்டம் வாங்கினார். நாசாவில் பணிபுரியும் வாய்ப்பு கிடைத்தது. விமானம், க்ளைடர்கள் போன்றவற்றைக் கற்றுக் கொடுக்கவும், ஓட்டவும் அனுமதி பெற்றிருந்தார்.*

*1995-ம் ஆண்டு விண்வெளி வீரர் பயிற்சி குழுவில் சேர்ந்தார் கல்பனா. அடுத்த ஆண்டே அவருடைய கனவு, லட்சியம் நிறைவேறுவதற்கான வாய்ப்பு கிடைத்தது. கொலம்பியா விண்வெளி ஓடம் குகூகு-87ல் பயணம் செல்வதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்தக் குழுவில் ஆறு விண்வெளி வீரர்கள் இருந்தனர்.*

*1997, நவம்பர் 19 அன்று கொலம்பியா விண்வெளி ஓடம் கிளம்பியது. 15 நாள்கள், 16 மணி நேரங்கள், 35 நிமிடங்கள் இந்தப் பயணம் நீடித்தது. டிசம்பர் மாதம் 5ந் தேதி பத்திரமாக*



*பூமியை வந்தடைந்தது. இந்தப் பயணத்தில் பல பரிசோதனைகளும் ஆராய்ச்சிகளும் செய்யப்பட்டிருந்தன. கல்பனாவின் புகழ் எங்கும் பரவியது.*

*203ம் ஆண்டில் மீண்டும் கல்பனாவுக்கு ஒரு வாய்ப்பு. குகூகு-107 கொலம்பியா ஓடம் ஜனவரி 16ல் கிளம்பியது. இதுவும் 15 நாள்கள், 22 மணி நேரம், 20 நிமிடங்கள் பயணம் செய்து, பூமியை நோக்கித் திரும்பியது. 2003, பிப்ரவரி 1 அன்று விண்வெளி ஓடம் வெடித்துச் சிதறியதில் கல்பனாவின் உயிர் பிரிந்தது.*

*40 வயதில் மறைந்து போன கல்பனா, தன் வாழ்நாளில் 31 நாட்களை விண்வெளியில் செலவிட்டிருக்கிறார். விண்வெளிக்குச் சென்ற முதல் இந்தியப் பெண் கல்பனாவின் புகழ் என்றும் நிலைத்திருக்கும்!*

*உங்கள் கனவுகளே உங்கள் வெற்றிக்கு பாதையாய் அமையும்!*

# ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தும் வாய்ப்பு கச்சா எண்ணெய் விலை உயர்கிறது!




ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தத் தயாராகி வருவதாக வெளியாகும்தகவல்காரணமாக கச்சா எண்ணெய் விலை உயர தொடங்கி உள்ளது.

இஸ்ரேலுக்கும் மற்றும் பாலஸ்தீனைச் சேர்ந்த ஹமாஸ் அமைப்பிற்கும் இடையே கடந்த ஓராண்டாகப் போர் நடந்து கொண்டிருக்கிறது. காசா பகுதியை தங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வருவோம் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு திட்டவட்டமாக கூறியுள்ளார். இஸ்ரேல் படையினர் காசாவில் தாக்குதலை தீவிரப்படுத்தி உள்ளனர்.

ஷஇந்நிலையில், ஈரானின் அணுசக்தி நிலையங்கள் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தத் தயாராகி வருவதாக அமெரிக்க உளவுத்துறை தெரிவித்துள்ளது. இதனால் சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர தொடங்கி உள்ளது. கச்சா எண்ணெய் விலை 1%க்கும் அதிகமாக உயர்ந்தன. இது குறித்து ஆய்வாளர்கள் கூறியதாவது:

ஷஇஸ்ரேலின் தலைமை அத்தகைய தாக்குதலை நடத்த இறுதி முடிவை எடுத்திருக்கிறதா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

இது பற்றிய தகவல்களால் கச்சா எண்ணெய் விலை பீப்பாய்க்கு 2 டாலருக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது. அதே நேரத்தில் பிரெண்ட் கச்சா எண்ணெய் 1 டாலருக்கும் அதிகமாக உயர்ந்துள்ளது.

ஷஉலகின் மூன்றாவது பெரிய கச்சா எண்ணெய் உற்பத்தியாளரான ஈரான் மீதான இஸ்ரேல் தாக்குதல் நடத்தினால் உற்பத்தி கடுமையாக பாதிக்கும். விலையும் தாறுமாறாக உயரும். இதன் தாக்கம் உலகம் முழுவதும் இருக்கும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர். (ஐ)

## காசாவில் குழந்தைகள் இறக்கும் அபாயம் ஐ.நா., கடும் எச்சரிக்கை



காசா பகுதிக்கு உணவு, மருத்துவ உதவிகள் வழங்காவிடில், அடுத்த 48 மணி நேரத்தில் 14,000 குழந்தைகள் இறக்கக்கூடும் என ஐ.நா. கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளது.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் படையினருக்கு இடையே போர் நடந்து வருகிறது. இதனால் காசாவில் இஸ்ரேல் வான்வழி தாக்குதல் நடத்தி வருகிறது. கடந்த 11 வாரங்களாக காசாவுக்குள் செல்லும் அனைத்து உதவிப் பொருட்களையும் இஸ்ரேல் நிறுத்திவைத்தது. தற்போது குறைந்த அளவிலான உதவிப்பொருட்களை காசாவுக்குள் கொண்டு செல்ல மட்டும் இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு அனுமதி அளித்துள்ளார்.

இது தொடர்பாக, ஐ.நா., தலைவர் டாம் பிளெட்சர் கூறியதாவது: காசாவிற்குள் இப்போது அனுமதிக்கப்படும் குறைந்த அளவிலான உதவிகள், உணவின்றி பஞ்சத்தில் தவித்து வரும் பொது மக்களுக்கு போதுமானதாக இருக்காது. தற்போது 5 லாரிகளை மட்டுமே இஸ்ரேல் அனுமதித்துள்ளது.

காசாவை எங்கள் கட்டுப்பாட்டில் கொண்டு வருவோம் இஸ்ரேல் பிரதமர் திட்டவட்டம்

இந்த சிறிய அளவிலான உதவி கூட இன்னும் தேவைப்படுபவர்களை சென்றடையவில்லை. நாங்கள் அவர்களை அடையவில்லை என்றால், அடுத்த 48 மணி நேரத்தில் 14,000 குழந்தைகள் இறந்துவிடுவார்கள்.

ஊட்டச்சத்து குறைபாடுள்ள தாய்மார்களுக்கும், தங்கள் குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுக்க முடியாத அவநம்பிக்கையான சூழ்நிலைகளில் உள்ளவர்களுக்கும் உணவைக்கொண்டு செல்வதில் நாங்கள் அனைத்து வகையான சவால்களையும் எதிர்கொள்கிறோம்.

இன்று காசாவிற்கு குழந்தை உணவு மற்றும் ஊட்டச்சத்து பொருட்களை மேலும் 100 லாரிகளில் வழங்க ஐ.நா எதிர்பார்க்கிறது. அடுத்த 48 மணி நேரத்திற்குள் இந்த 14,000 குழந்தைகளில் முடிந்தவரை பலரைக் காப்பாற்ற விரும்புகிறோம். இவ்வாறு அவர் கூறினார். (ஐ)



## குண்டு காயத்துடன் லஷ்கர் தொய்பா பயங்கரவாதி: ஐ.எஸ்.ஐ., பாதுகாப்புடன் சிகிச்சை

லஷ்கர் இ தொய்பா பயங்கரவாத இயக்கத்தை உருவாக்கியவர்களில் ஒருவனான அமீர் ஹம்சா, குண்டு காயத்துடன் சிகிச்சை பெற்று வரும் விவரம் வெளியாகி உள்ளது.

உலக நாடுகளை அச்சுறுத்தி வரும் லஷ்கர் பயங்கரவாத இயக்கத்தை நிறுவிய 17 பேரில் அமீர் ஹம்சாவும் ஒருவன். பல்வேறு பயங்கரவாத தாக்குதல் சம்பவங்களில் மூளையாக செயல்பட்டவன்.

இவன் லாகூரில் உள்ள தனது வீட்டில் இருந்து குண்டு காயத்துடன் கொண்டு செல்லப்பட்டு லாகூர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளான். அவனுக்கு பாகிஸ்தான் ராணுவ உளவு அமைப்பான ஐஎஸ்ஐ பாதுகாப்புடன் தொடர்ந்து அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவனில் உடலில் துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்துள்ளது.

என்ன சம்பவம், எப்படி தாக்குதல் நடந்தது, பாதுகாவலர்களுக்கு என்ன ஆனது என்பது பற்றி எந்த தகவல்களையும் வெளியிடாமல் பயங்கரவாதிகள் மூடி மறைக்கின்றனர்.

பயங்கரவாதிகளுக்கு ஆதரவாக செயல்படும் பல்வேறு சமூக ஊடகங்களில், ஹம்சா மீதான தாக்குதல் பற்றிய தகவல்கள் வெளியாகி வருகின்றன.

அமெரிக்கா லஷ்கர் இ தொய்பா இயக்கத்தை தடை செய்யப்பட்ட அமைப்பாக அறிவித்து,தேடப்பட்டு வரும் பயங்கரவாதி என்ற பட்டியலில் அமீர் ஹம்சாவை வைத்துள்ளது.

அமீர் ஹம்சா, தற்போது லஷ்கர் பயங்கரவாத அமைப்பின் நிதி வசூல், இதழ்கள், வெளியீடுகளை கவனிக்கும் பொறுப்பில் இருப்பவன் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சீனா, ரஷ்யாவை எதிர்கொள்ள ஏவுகணை பாதுகாப்பு அமைப்பு அறிவித்தார் டிரம்ப் சிறப்புகள் ஏராளம்!

சீனா, ரஷ்யாவை எதிர்கொள்ள 'கோல்டன் டோம்' எனப்படும் ஏவுகணை பாதுகாப்பு அமைப்பை அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் அறிவித்தார்.

சீனா மற்றும் ரஷ்யாவால் ஏற்படும் அச்சுறுத்தல்களில் இருந்து அமெரிக்காவை பாதுகாக்கும் நோக்கில், 'கோல்டன் டோம்' எனப்படும் ஏவுகணை பாதுகாப்பு அமைப்பை டிரம்ப் அறிவித்துள்ளார். இந்த ஏவுகணை பாதுகாப்பு அமைப்பு இன்னும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் அமைக்கப்படும் என டிரம்ப் உறுதி அளித்துள்ளார்.

இந்த பாதுகாப்பு ஏவுகணை அமைப்பு 175 பில்லியன் டாலர் (இந்திய மதிப்பு படி ரூ.14.7 லட்சம் கோடி) செலவில் அமைக்கப்பட உள்ளது. இந்த ஏவுகணை பாதுகாப்பு அமைப்பு எதிரி செயற்கைக்கோளை இடைமறிக்கும் திறன் கொண்டது. சிறிது நேரத்தில் துல்லியமாக தாக்கும் திறன் கொண்டது.

உக்ரைனில் போரை முடிவுக்கு கொண்டு வர தயார்: டிரம்புடன் பேசிய பிறகு ரஷ்ய அதிபர் புடின் மனமாற்றம. இது குறித்து அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் கூறியதாவது: பிரசாரத்தின் போது, வெளிநாட்டு ஏவுகணை தாக்குதல் அச்சுறுத்தலில் இருந்து நமது தாயகத்தைப் பாதுகாக்க ஒரு அதிநவீன ஏவுகணை பாதுகாப்பு அமைப்பை உருவாக்குவேன் என்று அமெரிக்க மக்களுக்கு உறுதியளித்தேன். அதைத்தான் இன்று நாம் செய்து கொண்டிருக்கிறோம். ஏவுகணை பாதுகாப்பு அமைப்பு தனது இரண்டாவது அதிபர் பதவிக்காலம் முடிவதற்குள் நிறைவடையும். இன்று இந்த அதிநவீன அமைப்புக்கான கட்டடக்கலையை அதிகாரப்பூர்வமாகத் தேர்ந்தெடுத்துள்ளோம் என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். பாலிஸ்டிக், ஹைப்பர் சோனிக் ஏவுகணைகளை அழிக்கும் வல்லமை கொண்ட 'கோல்டன் டோம்' கேம் சேஞ்சராக இருக்கும்.

துணைத் தலைவரான ஜெனரல் மைக்கேல் குட்லின், கோல்டன் டோம் திட்டத்தை செயல்படுத்துவதற்கும், மேற்பார்வையிடுவதற்கும் தலைமை தாங்குவார். இந்த முயற்சிக்கு ராணுவத் தலைவர்கள் வலுவான ஆதரவைத் தெரிவித்தனர். இவ்வாறு அவர் கூறினார். (ஐ)



## 3 வாகனங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இனிகொடவெல ரயில் கடவைக்கு அருகாமையில் இன்று புதன்கிழமை அதிகாலை 6.25 மணியளவில் சீமெந்து ஏற்றிய வாகனம், ஹயஸ் வான் மற்றும் பெற்றோல் ஏற்றும் வாகனம் ஆகிய மூன்று வாகனங்கள் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன.

இதன்போது ஹயஸ் வாகனம் பாரிய சேதமடைந்துள்ளது.

விபத்தில் காயமடைந்த 7 பேரும் சிலாபம் பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து தொடர்பில் சிலாபம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## 769...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பருத்தித்துறை - பொன்னாலை வீதி வரையிலான பலாலி வீதி உயர் பாதுகாப்பு வலயத்தினுள் காணப்பட்டமையால், வசாவிளான் சந்தியுடன் தமது சேவைகளை மட்டுப்படுத்தி இருந்தன.

அதனால் மயிலிட்டி பகுதியில் வசிக்கும் மக்களின் நலன் கருதி, யாழ்ப்பாணம் நகரில் இருந்து புறப்படும் 769 வழித்தட பஸ்கள் மயிலிட்டி வரையில் சேவையில் ஈடுபட்டன.

தற்போது உயர் பாதுகாப்பு வலயத்தின் ஊடாகச் செல்லும் பலாலி வீதி திறக்கப்பட்டுள்ளமையால், யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்படும் 764 வழித்தட பஸ்கள் யாழ்ப்பாணம் நகரில் இருந்து புறப்பட்டு பலாலி வீதியூடாக பருத்தித்துறை - பொன்னாலை வீதியை அடைந்து அதனூடாக காங்கேசன்துறை ரயில் நிலையத்துக்கு அருகில் உள்ள பஸ் நிலையம் வரையில் சேவையில் ஈடுபடுகின்றன.

இந்நிலையில் 769 வழித்தட அனுமதியில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ் உரிமையாளர்கள் தாம் இதுவரை காலமும் மயிலிட்டியில் இருந்து சேவையை ஆரம்பித்தது போன்று ஆரம்பிக்கவும், யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டு, காங்கேசன்துறை வீதி வழியாக மயிலிட்டி வரையில் சேவையில் ஈடுபட அனுமதிக்க வேண்டும் எனவும் கோரியே போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த மாதம் 30ஆம் திகதி வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் தனியார் பஸ் சேவை வழித்தடம் தொடர்பான கூட்டம் இடம்பெற்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

எனவே, குறித்த விடயம் தொடர்பாகக் கலந்துரையாட ஆளுநர் போராட்ட இடத்துக்கு வர வேண்டும் என்று பஸ் உரிமையாளர்கள், சாரதிகள், நடத்துனர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இறுதியாக பொலிஸார் தலையிட்டு வழமை போன்று சேவையில் ஈடுபடுமாறு கூறியதையடுத்து போராட்டம் கைவிடப்பட்டது.

## ஹெகலியவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் இலஞ்சம், ஊழல் வழக்கில் ரமித் ரம்புக்வெல நேற்று நீதிமன்றத்தால் சந்தேகநபராகப் பெயரிடப்பட்ட நிலையில், இலஞ்சம், ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவில் ஆஜராகுமாறு ரமித் ரம்புக்வெலவுக்கு உத்தரவிடப்பட்டிருந்தது.

இதன்படி ரமித் ரம்புக்வெல இன்று காலை இலஞ்சம், ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவில் வாக்குமூலம் வழங்குவதற்காக ஆஜராகியிருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் மகன் ரமித் ரம்புக்வெல அமைச்சின் நிதியிலிருந்து சுமார் 8 மில்லியன் ரூபாவை முறைகேடாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் பேரிலேயே கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாடசாலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கர்நாட்டுக்கேணி அ.த.க. பாடசாலையில் தரம் 3 இல் கல்வி கற்கும் எட்டு வயதுடைய மாதீஸ்வரன் நர்மதா என்ற மாணவியே இந்த விபத்தில் உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு, கொக்கிளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கர்நாட்டுக்கேணிப் பகுதியில் இன்று புதன்கிழமை காலை 7 மணியளவில் மேற்படி மாணவி பாடசாலைக்குச் செல்லும் வழியில் விபத்தில் சிக்கி சாவடைந்துள்ளார்.

அந்த மாணவி வீதிக்கு மறுபக்கத்தில் சென்று கொண்டிருந்த பணிஷ் வாகனத்தில் பணிஷ் ஒன்றை வாங்கிவிட்டு திரும்பிச் சென்றபோது கொக்குளாயில் இருந்து முல்லைத்தீவு நோக்கிச் சென்ற பட்டா ரக வாகனம் மோதி விபத்தை ஏற்படுத்தியுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த மாணவி முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தை ஏற்படுத்திய வாகனத்தின் சாரதியான புத்தளம் பகுதியைச் சேர்ந்த நபரை கொக்கிளாய் பொலிஸ் கைது செய்துள்ளதுடன், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பாடசாலை ஆரம்பிக்கும், முடிவடையும் வேளைகளில் குறித்த கர்நாட்டுக்கேணிப் பகுதியில் பொலிஸ் யாரும் பாதுகாப்புக் கடமைகளில் ஈடுபடுவதில்லை என்று அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரித்துள்ளனர்.

இந்த விபத்தை ஏற்படுத்திய சாரதி கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் கொக்குத்தொடுவாய் பகுதியில் விபத்தை ஏற்படுத்தியிருந்தார் என்றும், அதில் ஒருவர் உயிரிழந்திருந்தார் என்றும் அந்தப் பகுதி மக்களால் கூறப்படுகின்றது.

## தற்காலிக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவ்வர்த்தமானி அறிவித்தல் முழுமையாக வாபஸ் பெறப்படவேண்டும் என மீளவலியுறுத்தியுள்ளனர்.

காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் 28.03.2025 திகதியிடப்பட்டு, 2430 இலக்கமிடப்பட்டு பிரசுரிக்கப்பட்டிருக்கும் வர்த்தமானி அறிவித்தலில் வடக்கு மாகாணத்தில் மொத்தமாக 5,940 ஏக்கர் காணிகளை 3 மாதகாலத்துக்குள் எவரும் உரிமை கோராதுவிடின், அவை அரச காணிகளாகப் பிரகடனப்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் கடுமையான எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ள தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், அதனை உடனடியாக வாபஸ் பெறுமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளனர்.

அதனையடுத்து அவ்வர்த்தமானி அறிவித்தலில் உள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவதை தற்காலிகமாக இடைநிறுத்துவதாக கடந்த ஞாயிற்றுக்கிழமை அரசாங்கம் அறிவித்துள்ளது.

இருப்பினும் எவரேனும் காணிகளுக்கான உரிமையை நிறுவுவதற்குத் தவறும் பட்சத்தில் அல்லது காணிகளுக்கு உரிமை கோராதவிடத்து, அக்காணிகள் கட்டாயமாக அரசுடைமையாக்கப்படவேண்டும் என காணி நிர்ணய கட்டளைச் சட்டத்தின் 5 (1) ஆம் பிரிவில் வலியுறுத்தப்பட்டிருப்பதாக சிரேஷ்ட சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆகவே அரசாங்கம் அறிவித்துள்ளவாறு தற்காலிக இடைநிறுத்தம் எந்தவொரு தரப்பினருக்கும் நிரந்தர தீர்வைப் பெற்றுத்தராது எனவும், ஆகையினால் மேற்குறிப்பிட்ட வர்த்தமானி அறிவித்தல் முழுமையாக வாபஸ் பெறப்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# கொழும்பு மாவட்டத்தில் உள்ள கால்வாய்கள் மற்றும் வடிகால் கட்டமைப்பை புனரமைக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை!

கொழும்பு மாவட்டத்தில் அதிகரித்து வரும் டெங்கு மற்றும் சிக்கன்குன்யா நோய் பரவல் காரணமாக கால்வாய்கள் மற்றும் வடிகால் கட்டமைப்பை விரைவாக புனரமைக்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சம்பந்தப்பட்ட பிரிவுகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சு மற்றும் தொடர்புடைய நிறுவனங்களின் அதிகாரிகளுடன் ஜனாதிபதி செயலகத்தில் நேற்று (20) நடைபெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வழங்கினார்.

இந்தக் கலந்துரையாடலில் நகர அபிவிருத்தி, நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சர் அனுர கருணாதிலக்க, மேல் மாகாண ஆளுநர் ஹனீப் யூசுப், நகர அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர், இலங்கை காணிகள் அபிவிருத்திக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் மற்றும் தொடர்புடைய நிறுவனங்களின் சிரேஷ்ட அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது கொழும்பு மாவட்டத்தில் உள்ள கால்வாய்கள் மற்றும் வடிகால் கட்டமைப்புகளை முறையாகப் பேணப்படாமை குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்த ஜனாதிபதி, குப்பை மற்றும் கழிவுநீரை முறையாக அகற்றுவது குறித்து நிலையான தீர்வுகளுடன் கூடிய திட்டத்தைத் தயாரிக்குமாறு நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு அறிவுறுத்தினார். அது குறித்த திட்டங்களை உடனடியாக சமர்ப்பிக்குமாறும் மேலும் தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் பொலிஸாரை பலப்படுத்தல் மற்றும் சமூக குழுக்களின் செயலூக்கமான பங்களிப்பைப் பெறுவதன் ஊடாக முறையற்ற கழிவகற்றல் பிரச்சினைக்குத் தீர்வு காண்பது குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

## ரணில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேம்நாத் சி தொலவத்த தெரிவிக்கையில்,

"அநுர அரசின் தோல்வி உறுதியாகிவிட்டது. ஒருபுறம் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகள் தலைதூக்கியுள்ள நிலையில், மறுபுறம் உப்பு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கள்வர்கள் என விமர்சித்த எமது உறுப்பினர்களிடம் பேரம் பேசி, அவர்களின் ஆதரவுடன் சபைகளை நிறுவுவதற்கு அரசு முயற்சிக்கின்றது.

அதிகாரத்துக்காக எதையும் செய்யும் சம்பிரதாயபூர்வ அரசியலிலேயே அவர்கள் ஈடுபட்டுள்ளனர். சகல எதிர்க்கட்சிகளுடனும் இணைந்து உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைத்து மக்களுக்கான சேவைகளை வழங்குவோம்.

அரசு 50 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ள உள்ளூராட்சி மன்றங்களில் நாம் தலையிடப் போவதில்லை. ஆனால், எதிர்க்கட்சிகள் 50 சதவீதத்தைப் பெற்றுள்ளவற்றில் நிச்சயம் நாம் ஆட்சி அமைப்போம்.

குரங்குகள் சனத்தொகை கணக்கெடுப்பைப் போன்று நடைமுறை சாத்தியமற்ற திட்டங்களைத் தவிர, பிரயோசனமான எந்தவொரு நடவடிக்கைகளையும் அரசு முன்னெடுக்கவில்லை. ஆங்கிலேயர் ஆட்சியின் பின்னர் முதன்முறையாக இலங்கையில் உப்புத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

அரசின் மீது மக்கள் அதிருப்தியை வெளிப்படுத்தியுள்ள நிலையில், மக்களின் செய்தியை எதிர்க்கட்சிகள் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும்." - என்றார்.

# வீட்டில் மின்சாரக் கம்பியில் சிக்கி 11 வயது சிறுமி பரிதாப உயிரிழப்பு

கண்டி, மே 21

வீட்டில் மின்சாரக் கம்பியில் சிக்கி சிறுமி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

கண்டி, வெலம்பொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோவில்கந்த பிரதேசத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை இந்தத் துயரச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் கோவில்கந்த, வட்டப்பொல பிரதேசத்தைச் சேர்ந்த 11 வயதுடைய சிறுமி ஆவார்.

சம்பவ தினத்தன்று சிறுமி தனது வீட்டின் மேல் மாடிக்குச் சென்று ஏணி ஒன்றில் ஏறியபோது அருகிலிருந்த மின்சாரக் கம்பியில் சிக்கி உயிரிழந்துள்ளார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்த சிறுமியின் சடலம் கண்டி வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வெலம்பொட பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# யாழ். மாவட்டச் செயலகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள கடவுச்சீட்டு அலுவலக புனரமைப்பு தொடர்பில் கலந்துரையாடல்!

யாழ். மாவட்டச் செயலகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள கடவுச்சீட்டு அலுவலக புனரமைப்பு வேலைகள் தொடர்பான முன்னேற்ற கலந்துரையால் நேற்று நடைபெற்றது.

யாழ். மாவட்டச் செயலகத்தின் அரசாங்க அதிபர் அலுவலகத்தில், மாவட்ட அரச அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றிருந்தது.

இந்த கலந்துரையாடலில், யாழ். மாவட்டச் செயலகத்தில் ஆரம்பிக்கப்படவுள்ள கடவுச்சீட்டு அலுவலக புனரமைப்பு வேலைகளை விரைவாக நிறைவேற்றிமுடிக்க வேண்டிய தேவைப்பாடு குறித்து யாழ். மாவட்ட அரச அதிபர் ம. பிரதீபன் வலியுறுத்தியிருந்தார்.

அத்துடன் ஒப்பந்தகாரர்களினால் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைகளின் முன்னேற்றத்தினை ஒவ்வொன்றாக ஆராய்ந்து, அதற்குரிய அறிவுறுத்தல்கள் சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்த கலந்துரையாடலைத்தொடர்ந்து, அரச அதிபர் கடவுச்சீட்டு அலுவலகம் அமையவுள்ள இடத்தில் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைகளை நேரடியாக ஆய்வுசெய்ததுடன், வேலைகளைவிரைவுபடுத்துவது தொடர்பாகவும் பணிப்புரைகள் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.05.2025 வெளியிடப்பெற்றது.